# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் **சிறப்பு அவசரக்கூட்டம்** 2013 மார்ச் திங்கள் 08.03.2013–ம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**குளச்சல் நகர்மன்ற தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொம்பன்விளாகம், வெள்ளிப்பிள்ளையார் கோவில் பகுதியில் வசித்து வரும் மூன்று நபர்கள் ஆழ்துழாய் கிணறு தோண்டி இராட்சத மின்மோட்டர் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு விற்பனை செய்து வந்ததால், குளச்சல் நகராட்சி மற்றும் அருகில் அமைந்துள்ள நான்கு பஞ்சாயத்துக்களுக்கும் மிகப்பெரிய அளவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதுடன், குடிநீர் உப்பு ஆவதற்கு வாய்ப்புகள் அதிகரிப்பதாகவும் பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றதால், மேற்படி பொருள் தொடர்பான இந்நகர்மன்ற தீர்மானம் எண்.253 நாள் 31.05.2012–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்பட்டது. தற்போது மேற்படி மூன்று நபர்களில் திரு.பி.பச்சைமால் என்பவர் மட்டும் தொடர்ந்து வியாபார நோக்குடன் அதே செயலை செய்து வருவதாலும், மின்சார தட்டுப்பாட்டு நேரங்களிலும் ஜெனரேட்டர் மூலம் கூடுதலாக நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்வதாலும், இந்நகராட்சியின் குடிநீர் ஆதாரங்கள் மற்றும் அருகிலுள்ள நீர் ஆதாரங்கள் வெகுவாக பாதிப்புள்ளாகி குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, சட்டத்திற்கு புறம்பாக நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்து வரும் மேற்படி நபர் மீது, மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் கேட்டுக் கொள்ளலாம்.

**தீர்மானம் . ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**நகராட்சி பகுதிக்குள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள விசைபடகுகளுக்கும், மற்றும் தனிநபர்களுக்கு தேவைப்படும் எந்த நிகழ்ச்சிகளுக்கும், குடிநீர், குளச்சல் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் வழங்கிட மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**குடிநீர் கட்டணம் வசூலிக்க கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.**

**கட்டணவிபரம்:**

**நகராட்சி வாகனம் மூலம் 6000லிட்டர் ரூ.750 மின்சாரம் மூலம்**
**ஜெனரேட்டர் மூலம் 6000 லிட்டர் ரூ.1200**
**தனியார் வாகனம் மூலம் 3000 லிட்டர் குடிநீருக்கு மட்டும் ரூ.50/–**
**தனியார் வாகனம் மூலம் 3000 லிட்டர் ஜெனரேட்டர்மூலம் ரூ.100**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# FORM-3
## MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 மார்ச் திங்கள் 25.03.2013–ம் நாள் திங்கள்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சி பகுதிசளில் உள்ள வார்டுகளில் மூன்றில் ஒரு பங்கு வீட்டினுள் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் வாங்கி அதனை தேவைக்கேற்ப பயன்படுத்தவும், அவசரக்கால தேவைகளுக்கு பயன்படுத்த தயார் நிலையில் இருப்பு வைத்திருக்குமாறும், நகராட்சி நிர்வாக இயக்குநர் 04.12.2012 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் 15.12.2012 –ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 5 – வீட்டினுள் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் மற்றும் அதற்கான புகை உருளைகள் வாங்க உத்தேச செலவு ரூ.1,30,000/–க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 464 நாள் 31.12.2012–ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, 5 –வீட்டினுள் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் அதற்கான புகை உருளைகள், 130 எண்ணிக்கை ஆகியவைகள் வாங்க பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு :

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | Fogging Machine (1–க்கு) | Gas Cylinder (1 –க்கு ) |
|---|---|---|---|
| 1 | செந்தூர் என்டர்பிரைசஸ், சென்னை. | ரூ. 18,000/– | ரூ. 230/– |
| 2 | மாருதி என்டர்பிரைசஸ், சென்னை. | ரூ. 17,325/– | ரூ. 210/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மாருதி என்டர்பிரைசஸ், சென்னை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வினியோக உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வினியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/3702/2009)

**தீர்மானம் எண்.505. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய்த் தடுப்பு பணிகள், கழிவுநீர் ஓடைகள் சுத்தம் செய்யும் பணி மற்றும் புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொள்ளும் பொருட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் ஆண்டொன்றுக்கு செலவினம் ரூ.10,00,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 465 நாள் 31.12.2012 –ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தத்தாரர் பெயர் | பணியின் பெயர் | நபர் 1—க்கு நாள் 1—க்கு |
|---|---|---|---|
| 1 | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், செந்தறைவிளை, ரீத்தாபுரம். | டெங்கு தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள். | ரூ. 275/— |
| 2 | திரு. சி.தேவகரிம் சேம், உடையார்விளை. | டெங்கு தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள். | ரூ. 325/— |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** பொது சுகாதாரம் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/1982/2012)

**தீர்மானம் எண்.506. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு சொந்தமான மினி லாறி TN.74 -Z 5508 கிளட்ச் பழுதாகி உள்ளதாகவும், அதனை நீக்கம் செய்யும் வகையில் தொகை ரூ.3,050/—க்கு திரு.ராஜ்குமார் மாற்று பணி ஓட்டுனர் அவர்கள் அவசர அவசியம் கருதி செலவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி தொகையினை திரு.ராஜ்குமார் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2913/2009)

**தீர்மானம் எண்.507. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் 17 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவி வரும் வறட்சி மற்றும் மின்தடை காரணமாக பொதுமக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்யும் நிலையில், தற்போது மூன்று ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றுவதற்கு கூடுதலாக 62.50 KVA Generator ஒன்று வாங்குவதற்கும், அதற்கான கேபிள் மற்றும் சேஞ்ச் ஓவர் சுவிட்ச் பொருத்தும் பணிக்கும், தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/519/2013)

**தீர்மானம் எண்.508. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10—ல் அமைந்துள்ள மீனவர் ஓய்வறை மிக மோசமாக பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.471, நாள் 31.12.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 26.02.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| **1.** | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **1.45%** அதிகம். |
| **2.** | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.21%** குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.21% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/4286/2012)

**தீர்மானம் எண்.509. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட ஈழக்காணிவிளையில் கதவு எண்.15–180/6 முதல் புனித மேரி ஆரம்பப்பள்ளி அருகில் உள்ள மூன்று தெருக்களில் புதிதாக குடிநீர் வினியோக குழாய் அமைத்து ஏற்கனவே போடப்பட்டுள்ள பிரதான குழாயுடன் இணைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.48,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.456, நாள் 30.11.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 15.02.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.24% கூடுதல். |
| 2. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.18% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.18% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4464/2012)

**தீர்மானம் எண்.510. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்துபுள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் – திங்கள்நகர் சாலையில், கிரிதங்கம் மருத்துவமனை அருகில் வடிகால் ஓடை இல்லாத காரணத்தால் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி சுகாதார கேட்டை விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே மேற்படி இடத்தில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மூடு சிலாப் ஆகியவற்றை ரூ.3,15,000/– மதிப்பீட்டில் அமைப்பதற்கு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 26.02.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.97% கூடுதல். |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** (1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,15,000/– க்கும், பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2)மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/518/2013)

**தீர்மானம் எண்.511. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.1485/2012/இ3 நாள் 28.04.2012–ல் தெரிவித்துள்ளபடி, இந்நகரட்சிக்குட்பட்ட முக்கிய பிரதான சாலைகளில் சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலை குறியீடுகள் அமைக்கவும், No Parking Board அமைக்கவும், மேலும் இந்நகராட்சி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு Flex Board அமைப்பதற்கும், ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/517/2013)

**தீர்மானம் எண்.512. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் அறை, மருந்தகம் மற்றும் ஊசி போடும் அறை ஆகியவை இல்லாத காரணத்தால் தனித்தனியாக தடுப்பு அமைப்பதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேராய்வு அறிவுரையின்படி, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்வதற்கு ஏதுவாக ஏ.வி.எம். கால்வாயின் குறுக்கே சிறுபாலம் அமைப்பதற்கும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான படுக்கை, மேஜை, நாற்காலி மற்றும் அலமாரி ஆகியவை வாங்குவதற்கும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,75,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/284/2013)

**தீர்மானம் எண்.513. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பொது சுகாதார பிரிவிலிருந்து 10 மாற்று பணியாளர்களை கொண்டு குடிநீர் வால்வுகள் திறக்கப்பட்டும், குடிநீர் வினியோக மோட்டார்கள் இயக்கப்பட்டும் வருகிறது. இதனால் பொது சுகாதாரப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது நிலவி வரும் மின்சார தட்டுப்பாட்டினை சமாளிப்பதற்காக ஜெனரேட்டர் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாலும், வறட்சியின் காரணமாக புதிதாக மூன்று ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதாலும், மேற்படி பணிகள் ஜெனரேட்டரை இயக்குவதற்கும், சீரான குடிநீர் வழங்குவதற்கும் போதுமான பணியாளர்கள் பொறியியல் பிரிவில் இல்லாத காரணத்தால் குடிநீர் அவசர அவசியம் கருதி ஒப்பந்தத்தாரர் மூலம் மின்பணியாளர் நிலை–II– 2 எண்ணங்கள், Valve, Motor மற்றும் Generator Operate செய்வதற்குரிய பணியாளர்கள் 5 எண்ணங்கள் மற்றும் பகிர்மான குழாய் பழுதுகள் நீக்கம் செய்ய Plumber Gr.II பணியாளர்கள் 2 எண்ணங்கள் பணிக்கு அனுப்பி தருவதற்கு PWD Schedule of Rate 2012-13–ன்படி, ஒரு வருடத்திற்கான மதிப்பீட்டு தொகை ரூ.6,71,400/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

/ (ந.க.எண்.இ2/460/2013)

**தீர்மானம் எண்.514. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில், இந்திரா காலனியில் அமைந்துள்ள குப்பை கொட்டும் இடத்தில் நிரம்பியுள்ள குப்பைகளை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அகற்றி நகராட்சி எல்கைக்கு வெளியில் கொண்டு செல்ல உத்தேச செலவுத் தொகை ரூ.2,10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/342/2012)

**தீர்மானம் எண்.515. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN.75 K.6526 –ன் கியர் மற்றும் கிரவுண் ஆயில் மாற்றிய வகையில் செலவு செய்யப்பட்டுள்ள ரூ. 1,722/– ஐ சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/7057–1/2011)

**தீர்மானம் எண்.516. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23–ல் கதவு எண்.29/22.E, பூக்குழி தெருவில் திரு.எஸ்.ஜாண்சுந்தர் ராஜ் என்பவருக்கு சொந்தமான கேஸ் குடோன் கட்டிடம் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடமானது கடந்த 2008–09–ம் ஆண்டிற்கு முன்னர் வரை இந்நகராட்சி சொத்துவரி மண்டலத்தின்படி மண்டலம் B–ல் அமைந்திருந்ததால் அரையாண்டு சொத்துவரியாக ரூ. 3,573/– கடந்த 10 வருடங்களுக்கு மேலாக செலுத்தப்பட்டு வருகிறது. 2008–09 ஆண்டுக்கு பின்னர் புதிதாக மாற்றம் செய்யப்பட்டுள்ள சொத்துவரி மண்டலங்களின்படி மேற்படி கட்டிடமானது மண்டலம் C–ல் வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு மண்டலம் C–ன் அடிப்படையில் 2012–13–I அரையாண்டு முதல் சொத்து வரியினை திருத்தம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/2941/2012)

**தீர்மானம் எண்.517. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, சிங்கன்காவு பகுதியில் நகர புல எண்.P2-3/10–ல் உள்ள பொது பாதைக்காக 3.00 சென்ட் இடத்தினை, இளங்கடை, நம்பர் 25, மேலப்புதுத்தெரு, கோட்டார் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.கதீஜா பீவி என்ற கதீஜா ஆரிப், நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் நன்கொடை பத்திரம் எண்.2632/2012–ல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார்.

மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** நன்கொடையாக பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.TPI/4725/2012)

**தீர்மானம் எண்.518. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 மார்ச் திங்கள் 25.03.2013–ம் நாள் திங்கள்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில் பணிபுரிந்த செல்வி.கே.சாந்தி, வருவாய் உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) என்பவர் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடர்ந்த வழக்கு எண். W.P.(MD)No.10529/2011 நாள் 11.01.2013–ன்படி பிழைப்பூதியம் வழங்க உத்திரவிடப் பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி வழக்கிற்கு மேல்முறையீடு செய்யப்பட்டதற்கான வழக்கு கட்டணத் தொகை ரூ.17,500/– ஐ அரசு வழக்கறிஞர், திரு.கே.பி.கிருஷ்ணதாஸ், மதுரை என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.சி1/1572/09)

**தீர்மானம் எண்.519. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட KSSS காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்ப் மற்றும் வி.கே.பி.பள்ளிக்கூடம் ஆகியவற்றின் அருகில் மூன்று இடங்களில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி நடைபெற்று முடிந்துள்ளது. மேற்படி மூன்று ஆழ்துளை கிணறுகளிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்றும் வகையில் புதியதாக பைப் லைன், Bore pit மற்றும் மீட்டர் பொருத்தும் அறை ஆகியவை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.2,10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.520. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை பகுதிக்குள் இருக்கும் மீன் மார்க்கெட் கூரை இயற்கை இடர்பாடுகளால் முற்றிலும் சேதமடைந்துள்ளது. மேலும் நகர்ப்புற வளர்ச்சி குழுமம் திட்டம் 2012–13–ன்கீழ் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளதால், தற்சமயம் தற்காலிகமாக இயங்கி கொண்டிருக்கும் மீன் மார்க்கெட்டை தினசரி சந்தைக்குள் மாற்றி செயல்படுத்துவதற்கு, புதியதாக மீன்சந்தை கொட்டகை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 1,80,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.521 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்துள்ள நூல்நிலையம் அருகாமையில், ஏற்கனவே தற்காலிகமாக இயங்கி கொண்டிருக்கும் மீன் மார்க்கெட் Shed-ஐ மாற்றி, நகராட்சிக்கு வருமானம் ஈட்டுகின்ற வகையில் கடை போன்ற மாற்றுப் பணியினை தேர்வு செய்திட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.522. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் புதிதாக வாங்கப்பட்டுள்ள கண்காணிப்பு வாகனம் TN.75 K.6526 –ஐ நிறுத்துவதற்கும், அண்ணாசிலை அருகில் உள்ள ரேசன்கடையில் விநியோகப் பொருட்களை வாங்கும் பொதுமக்களை வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், மொத்தம் இரண்டு பாதுகாப்பு மேற்கூரைகள் (Sheds) அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.523. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் 26.01.2013–ல் நடைபெற்ற 64–வது குடியரசு தினவிழா நிகழ்ச்சியை முன்னிட்டு விழாவிற்கு தேவையான தேசியக்கொடி, இனிப்புகள், பூமாலை ஆகியவை வாங்கியதற்கும், கொடிக்கம்ப மேடைக்கு வெள்ளையடித்தல், புகைப்படம் எடுத்தல் மற்றும் தேநீர் வழங்கியது ஆகியவற்றிற்கும் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 3265/– ஐ வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.524. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி